1995 மார்ச் 17]

வேண்டுமானால் விதிவிலக்கு வைத்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 43, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.*

வினா எண் 44, திரு டி. சாத்தையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

~~44—~~

இராஜபாளையம் சஞ்சீவி மலையில் மூலிகைகள்

**33130—திரு. டி. சாத்தையா:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் உள்ள சஞ்சீவி மலையில் மக்கள் உயிர் நலம் காக்கும் மூலிகைகள் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மூலிகைகளை வளர்க்க அல்லது பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இப்பகுதி வனத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மூலிகைகளை மத்திய அரசின் ஆயுர்வேத மற்றும் சித்த ஆராய்ச்சிக்கழகம் ஆய்வு செய்துவருகிறது.

திரு. டி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராஜபாளையம் தொகுதியில் உள்ள இந்த சஞ்சீவி மலையில், மக்கள் உயிர் காக்கும் மூலிகை மருந்துகள் அதிகமாக இருப்பதனால்தான் அதற்கு சஞ்சீவி மலை என்றே பெயர் வந்தது. இயற்கையோடு மனித வாழ்க்கை இணைந்தால்தான், இயற்கையை காத்தால்தான் மனித வாழ்க்கையையும் காக்க முடியும். அந்த அடிப்படையில் அதில் அதிகமாக உயிர் காக்கும் மூலிகைகள் இருப்பதால், அதற்கு ஃபென்சிங் போட்டு பாதுகாப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

[1995 மார்ச் 17

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஏறத்தாழ 225 ஹெக்டேர் பரப்பளவுள்ள பகுதியாகும். எனவே அதற்குத் தனியாக ஃபென்சிங் எல்லாம் அமைப்பது சிரமமாக இருக்கும். அங்கே இப்போது ஏறத்தாழ 32 வகையான மூலிகைகள் இருக்கின்றன என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே கொஞ்சம் வறட்சியாக இருக்கிற காரணத்தால், எதிர்பார்த்த அளவில் அல்லது அதிக அளவில் அங்கே வளர்ச்சி அடையவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதற்குத் தனியாக ஒரு பெரிய அளவிலே பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. மேலும் இப்போது ஆய்வு செய்ததிலே 32 மூலிகைகள் அங்கே இருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் துறையின் மூலமாக அதை எந்த அளவுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதைப் பற்றி சரியான நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலோபதியில் எத்தனையோ மருந்துகள் இருக்கின்றன. சில மனித வியாதிகளுக்கு, மஞ்சள் காமாலை, எயிட்ஸ் போன்ற வியாதிகளுக்கு அலோபதி மருந்தில் கிட்டத்தட்ட டிரீட்மெண்ட் இல்லாத நிலையில் இந்த சித்தமுறை மூலம் உடனடியாக நிவாரணம் கிடைக்கிறது. ஆகையினால் இப்பொழுது கூட இந்த சித்த முறையில் சிகிச்சை பெறுவதற்காக அரசாங்கமே 6 எயிட்ஸ் நோயாளிகளை, சித்த வைத்தியத்தின் மூலம் குணப்படுத்துவதற்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த மஞ்சள் காமாலை, எயிட்ஸ் போன்றவைகளுக்கு மருந்து இல்லாத நிலையில்– அலோபதியில் மருந்து இல்லாத நிலையில்–மனித நோய்களை தீர்ப்பதற்கு இந்த சித்த மூலிகைகளைப் பயன்படுத்தலாம். இந்த மலையில் அரிய மூலிகைகள் இருப்பதாலும், லேட்டஸ்டாக மூலிகை பெட்ரோல் என்று கூட சில வாரங்களுக்கு முன்னால் பத்திரிகையில் வந்தது. அந்த மூலிகைகூட இந்த சஞ்சீவி மலையில் இருப்பதாகத் தெரிகிறது. ஆகையினால் இதில் ஒரு ஸ்பெஷல் கவனம் செலுத்தி, அரிய மூலிகைகள் உள்ள இந்த சஞ்சீவி மலையை பாதுகாப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஆவன செய்வார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படித்தான் ரொம்ப நேரம் பேசினால், கேள்வி கேட்பதையே மறந்து விடுவீர்கள்.

1995 மார்ச் 17]

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் சித்த துறைக்கு ஒரு தனி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதிலே மிகவும் அக்கறையோடு இருக்கிறது. அதன் காரணத்தால்தான் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்து வருகிறார்கள். ஏற்கெனவே அரும்பாக்கத்திலே 10 ஏக்கர் பரப்பளவிலே நமக்கு ஒரு மூலிகைப் பண்ணை இருக்கிறது. அங்கே தேவையான மூலிகைகளை நாமே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல கொல்லி மலையில் 105 ஏக்கர் பரப்பளவிலே மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு 13½ ஏக்கர் நிலப்பரப்பு இந்த நடவடிக்கைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. மூலிகை விளைவிப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல திருநெல்வேலி மாவட்டத்திலே அபிஷேகப்பட்டிணம் என்ற இடத்திலே ஏறத்தாழ 180 ஏக்கர் நிலப் பரப்பை மூலிகைப் பண்ணை அமைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. நிலத்தை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. எனவே இப்படி இந்த அரசு, சித்தா துறைக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது என்பதையும், அதேபோல சஞ்சீவி மலையிலே இருக்கிற மூலிகைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கையை எந்த அளவுக்கு எடுக்க வேண்டுமோ – அவை இயற்கை சூழ்நிலையிலே வளர்கிற மூலிகைகள். எனவே, இருந்தாலும் அதை எந்த அளவுக்கு பாதுகாக்க முடியுமோ– அந்த அளவுக்கு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அலோபதியால் கைவிடப்பட்ட இனிமேல் அதற்கான டிரிட்மெண்ட் இல்லை, இது கிராணிக் நோய் என்று எல்லாம் முடிவு செய்யப்பட்ட பல்வேறு வியாதிகளைக் குணப்படுத்துவதற்கு சித்தா முறை மிகவும் பயனுடையதாக இருக்கிறது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இருந்தாலும் கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். எய்ட்ஸ் நோய் கண்டவர்களை ஆராய்ச்சி செய்வதற்கு அவர்களுக்கு நோயாளிகள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் எய்ட்ஸ் நோயைப் பொறுத்தவரையில் நாம் இப்போது எச்சரிக்கையாக சொல்ல விரும்புவது, இன்னும் அதற்கான மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. சித்த மருத்துவத்தில் கூட ஆராய்ச்சி தான் நடந்து கொண்டிருக்கிறதே ஒழிய

[1995 மார்ச் 17

அதற்கான மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். எனவே, எய்ட்ஸ்க்கு மருந்து கண்டுபிடித்து ஆகிவிட்டது என்று சொன்னால் அது பெரிய பிரச்சினையை உருவாக்கும் என்ற காரணத்தால்தான் இதை எச்சரிக்கையாக சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, அதற்கான மருந்து மேலை நாடுகளிலும் சரி, இங்கேயும் சரி இன்னும் சரியான அளவிலே எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஞானசேகரன், உங்களுக்கு அந்த மருந்து தேவையா? *(சிரிப்பு)* திரு. தாமரைக்கனி, இந்த மலை இருக்கிற பகுதியைச் சேர்ந்தவர்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் மட்டுமல்லாமல் அந்தப் பகுதியிலுள்ள செண்பகத்தோப்பு, சுந்தரமகாலிங்கம் கோவில் மற்றும் பிளவக்கல் அணைப்பகுதிகளில் எல்லாம் மூலிகைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. மூலிகைத் தோட்டமும் அரசால் நடத்தப்பட்டுக்கொண்டு வருகின்றன. புற்று நோயைக் குணப்படுத்தக்கூடிய டாக்சேன் என்ற மரமும், பட்டையும் அதிகமாக அங்கே இருக்கின்றன. இந்தத் தாவரத்தை, மரங்களை வெட்டுவதைத் தடுப்பதற்கும். வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடுப்பதற்கு- வெளிநாட்டு மருந்து கம்பெனிகள் எல்லாம் இந்த மரத்தை கள்ளத் தனமாக வெட்டுகிறார்கள்- இதைத் தடுப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளையும், பெண் குரலை ஆண் குரலாக ஆக்குவதற்கும், ஆண் குரலை பெண் குரலாக ஆக்குவதற்கும் வேண்டிய மூலிகைகள் எல்லாம் அங்கே அதிகமாகக் காணப்படுகின்றன. *(சிரிப்பு)* பேச்சு இல்லாதவர்கள் கூட பேச்சு பயிற்சி பெற டாக்டர்களுடன் வந்து 3 மாதத்தில் குணப்படுத்துவதை விட ஒரு மாதத்தில் குணப்படுத்தக்கூடிய மூலிகைகள் எல்லாம் அங்கே இருக்கின்றன. ஆகவே, தமிழக அரசு இது நம்முடைய செல்வம், கலைச் செல்வம், அதாவது தாவரச்செல்வம், மரச் செல்வம் இதை நீங்கள் அழியாத அளவில் இதைப் பாதுகாக்க, ஆராய்ச்சி செய்ய நடவடிக்கை எடுப்பீர்களா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்

1995 மார்ச் 17]

பார்த்தால் வேறு எங்கேயும் போகத் தேவையில்லை. ஸ்ரீவில்லிப்புத்தூரைச் சுற்றிப் போய் பார்த்தாலே எல்லா நோய்களையும் தீர்ப்பதற்கான மருந்துகள் கிடைத்துவிடும் என்ற வகையிலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சஞ்சீவி மலை என்பதே எங்கள் மலை, அதனுடைய தொடர்ச்சி தான் அவர்கள் இரண்டு பேர்களுக்கும் போகிறது. *(சிரிப்பு)*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: எனவே, அந்த மூலிகைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான், அந்த மூலிகைகளை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் தனியே ஒரு துறை துவங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதை முறையாகக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்கள் மீது ஆய்வு செய்வதற்குக் கூட நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன் விளக்கம் பெறலாம். *(சிரிப்பு).*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது எய்ட்ஸ் நோய்க்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். ஏற்கனவே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் இதற்கு ஒரு மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக இந்த அவையில் அறிவித்தார்கள். வாணியம்பாடியில் இருக்கக்கூடிய டாக்டர் அக்பர் கவுஸ் என்பவர் யுனானி மருத்துவ முறையில் செயல்படுபவர். அவர்களோடு நான் கூட அந்த மருத்துவ முகாமுக்குச் சென்று இருந்தேன் *(சிரிப்பு)* அங்கே எய்ட்ஸ் நோய் கண்ட 6 பேரைக் குணப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், அவர்களைப் போய்ப் பார்த்தேன் என்றுதான் கூறுகிறேனே ஒழிய ஏற்கெனவே, வாணியம்பாடியில் இருக்கக்கூடிய குற்றத்துறை நடுவர் அவர்களும் நானும் அங்கே மருத்துவ முகாமுக்கு சென்று இருந்தோம். எங்களுக்கு எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்துகிறார்கள், இதை அவையில் பேசவேண்டும் என்று ஒரு பெரிய குறிப்பை படங்களோடு கொடுத்து இருக்கிறார்கள். அதை ரூமில் வைத்து இருக்கிறேன். ஆகவே,

நம்முடைய குமாரதாஸ் அவர்கள் இந்த அவையில் ஏற்கனவே சொன்னது போலவும், அதேபோல் வாணியம்பாடி டாக்டர் அக்பர் கவுஸ் சொல்வது போலவும் இந்த யுனானி முறையை, சித்த மருத்துவ முறையை கொஞ்சம் ஆராய்ச்சி செய்து– காரணம் சித்த மருத்துவத்திற்கும். யுனானி மருத்துவத்திற்கும் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும். அரசும் ஏனோ முக்கியத்துவம் கொடுக்காமல் ஏதோ அலோபதி தான் சாதிக்கும் என்ற வகையில் அவர் நடைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள்– இந்த யுனானி மருத்துவத்திற்கும் அதேபோல் சித்த மருத்துவத்திற்கும் ஒரு ஆராய்ச்சி மையத்தை ஏற்படுத்தி இந்த எய்ட்ஸ் கிட்டத்தட்ட *1500* பேருக்கு வந்து இருப்பதாக இப்போது எல்லாம் கூட அரசு அதிகாரிகளே இப்போது எய்ட்ஸ் ஒர்க்ஷாப்பில் பேசி கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு எய்ட்ஸ் இப்போது நாட்டை பயமுறுத்திக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இந்த யுனானி மருத்துவத்திற்கும், அதேபோல் சித்த மருத்துவத்திற்கும் முக்கியத்துவத்தை அளித்து இதற்கு ஒரு ஆராய்ச்சி மையத்தை உடனடியாக ஏற்படுத்தி மக்களை எய்ட்ஸிலிருந்து காப்பதற்கு அரசு உடனடியாக போர்க்கால நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவுஸ் கொடுத்த மருந்தைச் சாப்பிட்டுப் பார்த்து இருக்கிறீர்களா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்கள் எப்பொழுதுமே பேசிக்கொண்டு வருவார். கடைசியிலே ஏதாவது ஒரு பிரச்சினையை கிளப்பாமல் அவர் முடித்த சரித்திரமே இல்லை. நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இந்த அரசு இந்திய மருத்துவத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டு இருக்கிறது என்றும், நாங்கள் அதற்கு வேண்டியவற்றைச் செய்து கொண்டிருக்கிறோம் என்றும் சொன்னேன். எய்ட்ஸுக்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்று நான் சொல்வதற்குக் காரணம், ஒரு பொது எச்சரிக்கைக்காக. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்ன உடனேயே எல்லா இடத்திலேயும் மருந்து கண்டுபிடித்தாகி விட்டது என்று சொன்ன உடனேயே மக்களுக்கு ஒரு அலட்சியம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, பொது எச்சரிக்கைக்காகத்தான் நான் அதைத் தெரிவித்தேன். ஏற்கனவே, திரு. குமாரதாஸ் அவர்கள் இங்கே

1995 மார்ச் 17]

தெரிவித்தார்கள். அதற்குப் பின்னாலே அரசு ஒரு கமிட்டி போட்டு இருக்கிறது. அவர்கள் ஆய்வு செய்வதற்காக அலோபதிக் டாக்டரையும், சித்தா டாக்டரையும் சேர்த்து ஒரு கமிட்டி அமைத்து, அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்து அதற்குக் தேவையான பேஷண்டும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இவ்வளவும் அரசாங்கம் செய்து கொண்டு இருக்கிறது. எனவே, அதிலே தீவிரமான நடவடிக்கையை நாங்கள் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். அதேபோல, அவர் சொன்ன குறிப்பிட்ட அந்த மருத்துவருடைய ஆராய்ச்சியும் எங்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் இன்னும் ஆராய்ச்சி அளவிலேயே இருக்கிறதேயொழிய அதற்கு மருந்து கண்டுபிடித்து, அதை குணப்படுத்தியாகிவிட்டது, இந்த நோயை நாங்கள் குணப்படுத்திவிட்டோம் என்று திட்டவட்டமாக அறிவிப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, இதற்கு அவர்கள் யாராவது அப்படிச் செய்வார்களேயானால் இங்கேகூட தனியாக அதற்கு ஏற்பாடு செய்து, அவர்கள் நிரூபிக்க வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்யலாம். குறிப்பாக அவர்கள் சொன்னார்கள். இது மாநில அரசுக்கும் மட்டும் பொருந்தும் என்பதல்ல. இங்கே மட்டும் இந்தப் பிரச்சினை இருக்கவில்லை. இந்தியா முழுவதும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. எனவே, இந்தியா முழுவதையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. அப்படி இருந்தால் மத்திய அரசாங்கம் இதற்காக கொஞ்சம் பணத்தை ஒதுக்கலாம். ஏனென்றால், இது பூதாகரமாக வரக்கூடிய ஒரு பிரச்சினை. எனவே, மத்திய அரசாங்கம் இதற்குப் பணத்தை ஒதுக்கிக்கூட ஏதாவது நடவடிக்கை எடுக்கலாம். இப்போது நம் அளவிலே நாம் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்துகொண்டு இருக்கிறோம். அதற்கான ஆய்வைச் செய்துகொண்டு இருக்கிறோம். எனவே ஒரு குற்றச்சாட்டு வரவேண்டும் என்பதற்காக அல்லது ஏதோ நாங்கள் அதை கவனிக்காமல் இருக்கிறோம் என்பதைப்போல நீங்கள் சொல்லக்கூடாது. இதற்கு என்ன தீவிரமான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாது. ஏனென்றால் அதையெல்லாம் நீங்கள் கவனிப்பதில்லை. எனவே, மத்திய அரசாங்கம்கூட இதிலே அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள்மீது இந்தப் பிரச்சினையைத் தள்ள வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. மிகுந்த பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிற காரணத்தால் அவர்களும் இதிலே பொறுப்பு எடுத்துக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.